காஞ்சிபுரம், ஜூலை 3 -

உத்திரமேரூர், டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர். ரங்கசாமி அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு.

தமிழக அரசின் உத்தரவின்படி, உத்திரமேரூர் அருகே திருப்புலிவனத்தில் இயங்கும் டாக்டர். எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2023-2024 ம் கல்வியாண்டிற்கான மாணவ-மாணவியர் சேர்க்கைக்கான முதலாண்டு மாணவர் சேர்க்கை வரும் 4-ம் தேதி காலை 9.30 மணியளவில் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் (B.A/BSC/B.Com) நடைபெறுகிறது.

அதன்படி 4-ம் தேதியன்று பிற்படுத்தப்பட்டோர் (BC) பிரிவினருக்கும், 5ம் தேதியன்று மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) பிரிவினருக்கும், 6ம் தேதியன்று ஆதிதிராவிடர் (SC) பிரிவினருக்கும், 7ம் தேதியன்று அனைத்து தகுதியான விண்ணப்பதாரர்களுக்கும் சேர்க்கை வழங்கப்படவுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.